**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – பணியிடை காலமான அரசு ஊழியர் திரு.சி.சந்திரன் என்பவரது மகன் - திரு.ச.அஜித்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் தட்டச்சராக பணி நியமனம் வழங்கப்பட்டது – தட்டச்சர் பணியினை வரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந-4(1))துறை**

12 JUN 2023

அரசாணை (ப) எண்.128

நாள்: 05.06. 2023
சோபகிருது ஆண்டு
வைகாசி 22 - ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.23.01.2020.
2. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடிதம் ந.க.எண்.இ6/ 22597/2021, நாள்.09.06.2022.

********

**ஆணை:-**

மேலே இரண்டில் படிக்கப்பட்ட, ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடிதத்தில், திருவண்ணாமலை மாவட்டம், அரசு ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதியில் இரவு காவலராக பணிபுரிந்து பணியிடையே **04.03.2018** அன்று மரணம் அடைந்த திரு.சி.சந்திரன் என்பவரது மகன் திரு.ச.அஜித்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் அரசு விதிகளின்படி தற்காலிக தட்டச்சர் பணி நியமனம் வழங்கப்பட்டு, 24.01.2022 முற்பகல் முதல் வேலூர் மாவட்டம், பெருமுகை அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியில் பணிபுரிந்து வருகிறார் என்றும், அன்னாரது தட்டச்சர் பணியினை வரன்முறை செய்து, உரிய ஆணை பிறப்பிக்குமாறும் அரசைக் கோரியுள்ளார்.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துரு உரிய ஆவணங்களுடன் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு அதனடிப்படையில், கருணை அடிப்படையில் 24.01.2022 அன்றைய தேதியில் தட்டச்சராக பணிநியமனம் வழங்கப்பட்டு, வேலூர் மாவட்டம், பெருமுகை அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியில் தட்டச்சராகப் பணிபுரிந்து வரும்

திரு.ச.அஜித்குமார் என்பவர் அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 24.01.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தனியர் தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் இசைவினை முறையே அதன் அலுவல் சாரா குறிப்பு எண்.18821/ட்டி/22-1, நாள். 04.01.2023 மற்றும் அலுவல் சாரா குறிப்பு எண்.4456822/G2/2023, நாள் 19.05.2023-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. லட்சுமி பிரியா,
அரசு செயலாளர்.

**பெறுநர்** :-

திரு.ச.அஜித் குமார், த/பெ.திரு.சி.சந்திரன் (late), தட்டச்சர்,
பெருமுகை அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி,
வேலூர் மாவட்டம்.
(ஆதி திராவிடர் நல இயக்குநரகம் வழியாக)
இயக்குநர், ஆதி திராவிடர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
மாவட்ட ஆட்சியர், வேலூர் மாவட்டம்.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
வேலூர் மாவட்டம்.
மாவட்டக் கருவூல அலுவலர், வேலூர் மாவட்டம்.
மாநில முதன்மைக் கணக்காய்வுத் தலைவர், சென்னை – 600 018 / 35
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை-600 008.

**நகல்** :-

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-600 009
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை,
செயலரின் தனிச் செயலாளர், சென்னை-600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

08/06/2023
பிரிவு அலுவலர்.

5/6/23

5/10